பிடிக்க வழியில்லே. நெல்லேக் கொண்டு போவதைத் தடுப்பதற்கு பலத்த பாதுகாப்புச் செய்வதற்கு எல்லா இடங்களிலும் செக்போஸ்டுகளே ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு மன்னே ப. நாராயணசாமி : ரோடுகளில் தான் செக்போஸ்டுகளே வைக்க முடியும். மற்ற வழிகளில் எப்படிக் கொண்டு போகிருர்களோ அதே மாதிரி அதைப் பிடிப்பதற்கும் ஏற்பாடு செய்திருக் கிருேம். அதிகாரிகளும் அந்த வழிகளில் நடந்துபோய் கண்காணித்துக் கொண்டு வருகிருர்கள். இருந்தாலும், பொது மக்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் தேவைப்படுகிறது. அப்படி அகப்பட்டுக் கொள்கிறவர்கள் பொருள்களேப் போட்டுவிட்டு ஓடிவிடுகிருர்கள். அந்த பிராபர்டிக்கு யார் ஜவாப்தாரி என்று தெரியாத நிலேகூட ஏற்பட்டுவிடுகிறது. அப்படிக் கண்டு பிடிப்பதையும் துரிதப்படுத்த வேண்டும். எந்த அளவில் அதிகமாகப் பிடிக்க முடியுமோ அந்த அளவுக்குப் பிடிக்க வேண்டும். நான் மூன்று தினங்களுக்கு முன்பு திருச்செந்தூர் கூட்டத்தில்கூட அங்கே இருக்கிற அதிகாரிகளேக் கலந்து பேசி சில முறைகளே ஏற்பாடு செய்திருக்கிருேம்.

திரு. சோ. அழகர்சாமி : லெவி கொள்முதல் சில மாவட்டங்களில் மட்டும் செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதே, அது எந்த அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது? உபரி மாவட்டங்களில் லெவி கொள் முதல் செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதா நெல்லே விளேயாத மாவட்டங்களில் லெவி இல்லே என்று விதி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : உபரி மாவட்டங்களில் எங்கே அதிகமான அளவு பரம்பரையாகக் கொள்முதல் செய்தார்களோ அந்த மாவட்டங்களில் கொள்முதல் செய்கிருர்கள். சில மாவட்டங்களில் விளேகிற நெல் அந்த மாவட்டத்தில் கொள்முதல் செய்யவேண்டியதில்லே. அங்கு இருக்கிற அரிசியை அங்கு இருக்கிற வியாபாரிகள் பற்றுக்குறை இருக்கிற இடங்களில் அங்கேயே நிரவிக்கொள்ளலாம். அதஞல்தான் அங்கே கொள்முதல் வைப்பதில்லே. தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் அவசியம், எவ்வளவு விரும்புகிருேமோ அந்த அளவுக்கு வழக்கமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. அந்த முறைப்படி அங்கேமட்டும் கொள்முதல் வைத்திருக்கிருேம்.

Recruitment of Police Constables.

*81 *Q.* THIRU K. T. K. THANGAMANI,
THIRU N.DENNIS:

Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) Whether it is a fact that the S.S.L.C. qualified persons have been recruited as Police constables; and

(*b*) If so, the number of them employed, district-wis ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) பேரவை முன் விவர அறிக்கை @ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : எஸ். எஸ். எல். ஸி. குவாலிபிகேஷன் உள்ள கான்ஸ்டேபிள்கள் எல்லோரு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இவர்கள் நேரிடை நியமன முறையில் ஆங்காங்கு மாவட்ட சூப்பரெண்டெண்டெண்டுகள் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. என். டென்னிஸ் : நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் இந்தப் போலீஸ் கான்ஸ்டபிள்களுக்குப் பொது மக்களோடு தொடர்பு கொள்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இவர்களுக்கு எல்லா வகையான பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இந்த நேரிடை நியமனம் என்பது 1,000 பேர் மாத்திரம் அல்ல. அவர்கள் அன்னியில், முதல் பிரிவு தகுதி படைத்த காவலர்கள் 2,771 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் நேரிடை நியமனத்தில் 962 பேர்களும், ஜூனியர் பிரமோஷன், அதாவது எஸ். எஸ். எல். ஸி. படித்துவிட்டு ஏற்கெனவே பணியாற்றிக்கொண்டிருப்பவர்கள் 809 பேரும், மூன்றும் படிவம் வரையில் படித்துவிட்டு, அதாவது தேர்டு ஃபாரம் வரையில் படித்துவிட்டு 10 ஆண்டுக் காலம் சர்வீஸில் இருந்தவர்கள் 1,000 பேரும், ஆக மொத்தம் 2,771 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பட்டப் படிப்புப் பெற்றவர்களும் முதல் தர கான்ஸ்டபிள்களாக நியமனம் பெற்றிருக்கிறார்களா ? அப்படியிருந்தால் அவர்களுக்கு விசேஷச் சலுகை ஏதாவது அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்களும், அதற்குமேல் படித்தவர்களும்தான் இதற்கு நிச்சயமாக அனுமதிக்கப்படுவார்கள். அப்படி அதற்குமேல் படித்தவர்கள் வருவதற்குத் தடை எதுவும் கிடையாது. வந்தாலும் வரவேற்றுக் கொள்கிறோம். ஆனால், விசேஷமாக அவர்களுக்குச் சலுகை அளிப்பது என்பது இயலாத காரியம். முதல்நிலை காவலர் தகுதியை அவர்கள் பெறுகிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : எஸ். எஸ். எல். ஸி. தேறிய காவலர்கள் பட்டப்படிப்புப் படிப்பதற்கு மாலை நேரக் கல்லூரியில் அனுமதிக்கப் படுவார்களா என்றும், அதற்கான விசேஷச் லுகைகளை இந்த அரசு செய்ய இயலுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

@ 103, 105-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: அவர்கள் இப்பொழுது உள்ள பயிற்சியை முடித்துவிட்டு, அவர்களுக்கு அளிக்கப்படுகிற பணியினை ஆற்றுகின்ற நேரத்தில் அதற்கு நேரம் ஒதுக்குவது இயலாத காரியம்.

திரு. எஸ். வடிவேல்: இப்பொழுது எடுக்கப்பட்டவர்களில் அரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: அதைப்பற்றி விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், அதைப்பற்றி விவரங்களை அளிக்க முடியும்.

திரு. அ. தேவேந்திரன்: முதல்நிலைக் காவலர்களாக நியமிக்கப் படுகிறவர்களுக்கு நீலநிறத் தொப்பி தரப்படுகிறது. அதில் பழைய காவலர்களுக்கு இருக்கிற "கெட் அப்" இல்லை என்று காவலர்கள் பேசிக்கொள்கிருர்கள். எனவே வேறு மாதிரி தலைப்பாகை, தொப்பி அவர்களுக்குத் தர அரசுக்கு உத்தேசம் உண்டா.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: பழைய காவலர்களுக்கும், இவர்களுக்கும் வேறுபாடு இருக்கவேண்டும் என்பதனுல்தான் அவ்வாறு தொப்பி தரப்படுகிறது. பழைய காவலர்களைப்போல் அல்ல என்று கூறுவார்களேயானுல், அது வரவேற்கக்கூடிய அம்சம் தான்.

திரு. ப. முத்துசாமி: ஃபர்ஸ்டு கிரேடு போலீஸ்காரர்கள் நியமனத் தின்மூலம் ஏற்கெனவே ஸ்டேஷன் ரைட்டர்களாகப் பணியாற்றியவர்கள் ரிவர்ஷன் ஆகிருர்கள் என்று கூறப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் மீண்டும் அந்தப் பதவிக்கு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: ரிவர்ஷன் என்ற பிரச்னைக்கு இடமே இல்லை. எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்களை நேரடியாக நியமிப்பது ஒரு முறை. எஸ். எஸ். எல். ஸி. படித்துவிட்டு, ஏற்கெனவே இரண்டாம் நிலை கான்ஸ்டபிள்களாக இருப்பவர்களை அந்தத் தேர்விலே அனுமதித்து, அவர்களிடமிருந்து தேர்ந்தெடுத்துக்கொள்வது இன்னொரு முறை. மூன்ரும் ஃபார்ம் வரை படித்து விட்டு 10 ஆண்டு சர்வீஸ் உள்ளவர்களிலிருந்து முதல்நிலை க்காவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவது மூன்ருவது முறை. இவர்களில் யாரும் ரிவர்ஷன் ஆவதற்கு வழி இல்லை.

திரு. கே. ஆர். கிருஷ்ணன்: தர்மபுரி மாவட்டத்தில் எந்த அடிப்படை யில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள், எவ்வளவு பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி:—தர்மபுரி மாவட்டத்தில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படாதவர்களின் தொகை இங்கே பட்டியலில் வைக்கப்பட்டிருக்கிறது. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் தொகையில் 20 பேர் இருக்கிருர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1973 பிப்ரவரி 9]

திரு. கே. எ. வகாப் : இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கின்ற கான்ஸ் டபிள்களில் எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்களும் பி. எ. படித்தவர்களும் இப்பொழுது கான்ஸ்டபிள்களாக இருக்கிறார்கள் என்று கூறினார்கள். பதவி உயர்வு வருகிறபொழுது, அப்படி அதிகமாகப் படித்தவர்களுக்கு முன்சலுகை அளிக்கப்படுமா ? அதன் மூலம் எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்கள் பாதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு பொன்னப்ப நாடார் அவர்களின் கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுதே கூறியிருக்கிறேன். பட்டதாரிகளாக இருந்தாலும், எஸ்.எஸ். எல். ஸி. படித்தவர்களாக இருந்தாலும், முதல்நிலைக் காவலர் தகுதியில் அமர்த்தப்படுகிறார்கள். அனைவரும் முதல்நிலைக் காவலர் தகுதியில் வரையறுக்கப்பட்டு நடத்தப் படுவார்கள்.

திரு. கோ. இளங்கோவன் : போலீஸ்காரர்களாகத் தேர்ந்தெடுக்கப்படு கிறவர்களுக்குக் குறைந்த பட்சம் எஸ்.எஸ்.எல்.ஸி. தகுதி இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது பரிசிலனையில் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : எஸ். எஸ்.எல்.ஸி. படித்துவிட்டு வேலை யில்லாமல் இருக்கிற இந்த நிலையைப் போக்குவதற்கு நம்முடைய அரசு இப்பொழுது ஃபர்ஸ்டு கிரேடு கான்ஸ்டபிள் நிலையை உண்டாக்கி இருக் கிறார்கள். இப்படி ஃபர்ஸ்டு கிரேடு கான்ஸ்டபிள் நியமனத்தின் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு செலவு ஆகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த விவரம் இல்லை. அது சமர்ப்பிக்கப்பட இருக்கிற நிதிநிலை அறிக்கையிலே வரும்.

திரு. எம். முத்தையா : போலீஸ்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில் அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதம் என்ற முறையில் எடுக்கப்பட்டுள்ளதா ? அல்லது எந்த முறையில் எடுக்கப்பட்டுள்ளது என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தச் சலுகையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும்.

குற்றங்களைக் கண்டுபிடித்தல்.

*82. வினா திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறையினர் குற்றவாளிகளென சந்தேகிக்கப்பட்டுகின்றவர் களிடமிருந்து உண்மையை வெளிக் கொணரப் பொறி இயல் சாதனங்களைப் பயன்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?